**இ.வே.ஆரா.கு – மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
**நாக்பூர்**

19 வது வாரம் - வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி (26 செப்டம்பர் – 2 அக்டோபர் 2023 )

(40 வது நிலையான வாரம்)

“இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள்- அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை”

| **தமிழ்நாடு** | | பெய்த மழையளவு –(மி.மீ) | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு – (மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செப்டம்பர் | | | | | செப்டம்பர்/ அக்டோபர் | | | | |
| | | **22** | **23** | **24** | **25** | **26** | **27** | **29** | **30** | **01** | **02** |
|  | பெரம்பலூர் | 16.2 | 0 | 0 | 23 | 0 | 2 | 0 | 3 | 3 | 3 |
| | சேலம் | 0 | 0 | 0 | 0 | 0.2 | 5 | 6 | 12 | 9 | 5 |
| | திருச்சி | - | - | - | - | - | 1 | 0 | 3 | 2 | 3 |
| | விருதுநகர் | 0 | 9.5 | 0.5 | 0 | 0 | 0 | 2 | 3 | 0 | 0 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | மிக அதிக மழைப்பொழிவு | |

**பயிர் நிலை**

கோயம்புத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் பயிரிடப்பட்ட பருத்தி ஆனது 64 முதல் 74 நாட்கள் வரை பூக்கும் பருவத்தில் உள்ளது. மேலே குறிப்பிட்ட நாட்களில் இரண்டாம் மேலுரம், கைகளை எடுத்தல் மற்றும் களை முளைத்த பின்னர் இடும் களைக்கொல்லிகள் பயன்படுத்தவும். வயல்களில் களைகள் காணப்படுகிறது. சில வயல்களில் தத்துப்பூச்சி, அஸ்வினி இலைப்பேன் மற்றும் அல்டர்நேரியா இலைத்தேமல் மற்றும் செர்கோஸ்போரா ஈலைப்புள்ளி நோய்த் தாக்குதல் காணப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் விதைப்பு பணி நடைபெறுகிறது. பயிரானது முளைத்து 34 முதல் 41 நாட்கள் வரை உள்ளது. களைகளான சாரணை, வட்டக்கோரை மற்றும் அருகு முளைத்து காணப்படுகிறது. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏதும் காணப்படவில்லை. மாறாக தத்துப்பூச்சி தாக்குதல் பாதிப்பும் பொருளாதார செய்த நிலைக்கு குறைவாக உள்ளது.

**ஆலோசனைகள்**

கோயம்புத்தூர் பகுதிகளில் விவசாயிகள் களைகளை அகற்றி வயல்களை சுத்தமாக வைத்து மண் அணைத்துக்கொள்ளவும். பருத்தியில் பூக்களை அதிகப்படுத்த இலை தெளிப்பான் மூலம் பருத்தி பிளஸ் @ 6.25 கிலோ/ ஹெக்டேர் பயன்படுத்தவும். சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை தொடர்ந்து கண்காணித்து வரவும். வேம்பு மூலம் தயாரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை @1 லிட்டர்/ஏக்கர் என 45-60 நாட்களான பயிரில் கலந்து தெளித்து சாறு உறிஞ்சும் மற்றும் இளஞ்சிவப்பு காய் புழுக்கள் முட்டையிடுவதை தவிர்க்கலாம். அசாடிரேக்டின் 0.15 ஈசி@1 லிட்டர்/ஏக்கரில் தெளித்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த தாயோமித்தாகசம் 25% டபில்யுஜி @2கி/10 லி (அல்லது) பிலோனிகமிட் 50 டபில்யுஜி @4கி/10 லி (அல்லது) டினோட்டீபூரன் 20 SG @ 3 கி/10 லி நீரில் கலந்து தெளிக்கவும். அல்டர்னெரியா இலை தேமல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டர்சிம் 50 டபிள்யு பி@ 0.04 % (அல்லது) கார்பன்டர்சிம் 12% மற்றும் மேங்கோசப் 63%@0.3 % (அல்லது) கிரிலோசிம் மெத்தில்

44.3 எஸ் சி@0.1 (அல்லது) ரோப் நிப் 70 டபிள்யூ பி@ 0.25 % (அல்லது) துரோபி கோனோசோல் 25 ஈசி@0.1% மெட்டிராம் 55% மற்றும் பைரா குளோரோபில் 5 % டபிள்யூ ஜி @0.2 (அல்லது) அசோசா சிஸ்ரோபின் 18.2% டபிள்யூ /டபிள்யூ எஸ் சி ஃ@0.1 (அல்லது) ஃப்ளோஷோ பைரோசாட் 167 கி/லிட்டர் மற்றும் பைரா குளோரோபின் 333 கிராம் /லிட்டர் எஸ்சி @0.6% கலந்து தெளிக்கவும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் கடந்த வாரம் பெய்த மழையால் நீர் தேங்கியுள்ளது. வரும் வாரம் லேசான மற்றும் மிதமான மழை கணிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் வடிகால் வசதிகள் வயல்களில் செய்யவும். தற்போது முளைத்துள்ள களைகளை கைகளை எடுத்து கட்டுப்படுத்தவும்.முதல் மேலுரமாக நைட்ரஜன் உரத்தை @ 20,40, மற்றும் 13 கிலோ/ஹெக்டேர் என முறையே நாட்டு ரகங்கள், ஒட்டு ரகங்கள், மற்றும் மானாவாரி இடங்களில் அளிக்கவும்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர். அ. மணிகண்டன், முனைவர். ம. சரவணன்**